சுருக்கம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – கரூர் மாவட்டம், கடவூர் ஊராட்சி ஒன்றியம் – பண்ணப்பட்டி ஊராட்சி – கோவில்பட்டியில் உள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி கட்டடத்தினை இடிக்க அனுமதி அளித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி–4) துறை

அரசாணை(ப)எண்.398 நாள்: 12.8.2010

படிக்கப்பட்டவை.

1. அரசாணை (நிலை) எண்.56, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, நாள் 3.4.2008.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடித எண்.91963/09/TU3, நாள் 1.3.2010.

-----

ஆணை:

கரூர் மாவட்டம், கடவூர் ஊராட்சி ஒன்றியம், பண்ணப்பட்டி ஊராட்சி, கோவில்பட்டியில் உள்ள 1225 சதுர அடி பரப்பளவு கொண்ட ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி கட்டப்பட்டு 25 ஆண்டுகள் ஆகிறது என்றும், தற்போது இக்கட்டடம் பயன்பாட்டிற்கு தகுதியான உறுதித் தன்மையுடன் இல்லை என்பதால் இதனை இடிப்பதற்கு 15.12.2009–ல் ஊராட்சி ஒன்றிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும், மேலும் இக்கட்டடத்தை தவிர இரண்டு கட்டடங்கள் பள்ளியின் பயன்பாட்டில் உள்ளது என்பதால் மேற்காணும் கட்டடத்தை இடிப்பதால் பள்ளி மாணவ / மாணவிகளுக்கு படிப்பிற்கு எவ்வித இடையூறும் ஏற்படாது என்றும், எனவே இப்பள்ளி கட்டடத்தினை இடித்துவிட கரூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் அனுமதி கோரியுள்ளதாக தெரிவித்து அக்கருத்துருவினை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

2. ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் இடிக்கப்பட வேண்டிய கட்டடம் குறித்து அரசால் கீழ்க்கண்ட அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன:–

(அ) கட்டடத்தின் வயது 40 ஆண்டுகளுக்கு மிகையாக இருந்தால் கட்டடத்தின் பரப்பினை ஏதும் கருத்தில் கொள்ளாமலும், கட்டடத்தின் வயது 30 ஆண்டுகளுக்கு அதிகமாகவும் கட்டடத்தின் பரப்பளவு 450 சதுர அடிக்கும் குறைவாகவும் இருந்தால் அத்தகைய கட்டடங்களை இடிப்பதற்கு உரிய நெறிமுறைகள் பின்பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரே உரிய ஆணை பிறப்பிக்கலாம்.

(ஆ) கட்டடத்தின் வயது 30–லிருந்து 40–க்குள்ளும் கட்டடங்களின் பரப்பளவு 450 சதுர அடிக்கு மேலாக இருந்தால் இத்தகைய கட்டடங்களை இடிப்பதற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் உரிய நெறிமுறைகளைப் பின்பற்றி ஆணை பிறப்பிக்கலாம்.

3. இந்நேர்வில், 1225 சதுர அடி கொண்ட இக்கட்டடம் கட்டப்பட்டு 25 ஆண்டுகள்தான் ஆகிறது. ஆனால் கண்காணிப்பு பொறியாளர் (ஊரக வளர்ச்சி) தன்னுடைய ஆய்வறிக்கையில் இக்கட்டடத்தின் ஆர்.சி.சி.கூரை மிகவும் பழுதடைந்து உள்ளது என்றும், கட்டடச் சுவர் முழுவதும் விரிசல்கள் உள்ளது என்றும், மேற்கூரையில் மழைநீர் கசிந்த வண்ணம் உள்ளது என்றும் தெரிவித்து கட்டடத்தின் வயதினை மட்டும் கணக்கில் கொள்ளாமல் கட்டடத்தின் ஸ்திரத்தன்மையற்ற நிலையினை கருத்தில்கொண்டு இப்பள்ளிக் கட்டடம் இடித்து அப்புறப்படுத்த தகுதியானது எனத் தெரிவித்துள்ளார்.

4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரது கருத்துரு அரசினால் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின்னர் கரூர் மாவட்டம், கடவூர் ஊராட்சி ஒன்றியம், பண்ணப்பட்டி ஊராட்சி, கோவில்பட்டியில் உள்ள 1225 சதுர அடி உடைய 25 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியின் கட்டட கட்டமைப்பின் உறுதியற்ற நிலையினை கருத்தில் கொண்டு இதனை சிறப்பினமாகக் கருதி இக்கட்டடத்தினை இடிப்பதற்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கா.அலாவுதீன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை – 15.
மாவட்ட ஆட்சியர், கரூர் மாவட்டம்.
மாநில கணக்காயர், சென்னை–18/35.

<u>நகல்</u>
முதுநிலை நேர்முக உதவியாளர்,
மாண்புமிகு துணை முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.